மாலை முரசு

பக்கங்கள் 19+2

## சிறையில் மரம் முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் பலி!

**11 பேர் காயம்**

மாத்தறை சிறைச்சாலையில் உள்ள கட்டடம் ஒன்றின் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன் 11 பேர் காயமடைந்தனர். 04

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 18 வியாழக்கிழமை 02.01.2025 | அதிர்வு 154

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# பாலத்தின் அடியில் இருந்து இரு ஆண்களின் சடலங்கள்

### கிளிநொச்சியில் பெரும் பரபரப்பு

கிளிநொச்சியில் பாலம் ஒன்றின் அடியில் இருந்து இரண்டு ஆண்களின் சடலங்கள் இன்று மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி ஏ - 35 வீதியில் அமைந்துள்ள புளியம்பொக்கணை 10ஆம் கட்டைப் பாலத்துக்கு அடியில் இருந்து ஒன்றாக இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டுக் காணப்படும் நிலையில், அங்கு அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. 04

## யாழ். பஸ் நிலையத்துக்கு அருகில் வன்முறையில் ஈடுபட்ட மூவர் கைது

### இரண்டு ஓட்டோக்களும் பறிமுதல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் இரவு வேளை ஓட்டோவில் சாகசம் காட்டி, வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் இரண்டு ஓட்டோக்களும் கைப்பற்றப்பட்டன.

அரியாலை மற்றும் பொம்மைவெளி பகுதிகளைச் சேர்ந்த மூவர் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் இன்று கைது செய்யப்பட்டனர்.

யாழ். நகரில் புத்தாண்டுக்கு முன்தினம் இரவு வேளை ஒன்றுகூடிய இளைஞர்கள் குழுவினர் ஓட்டோக்களில் சாகசம் காட்டியதுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவரையும் மறித்துக் கடுமையாகத் தாக்கியிருந்தனர். 04

## புறக்கோட்டை நீரோடையில் ஆணின் சடலம்



கொழும்பு, புறக்கோட்டை மிதக்கும் வணிக வளாகத்துக்கு அருகே உள்ள நீரோடையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மருதானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# விபத்தில் ஆசிரியை சாவு!

கேகாலை – அவிசாவளை வீதி, அட்டாலை பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர் என்று பிந்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அம்பே பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் கற்பிக்கும் அட்டாலை பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய அனுஷா ஜயசேகர என்ற ஆசிரியை ஆவார்.

மேற்படி ஆசிரியை, அவரது இரண்டு குழந்தைகளுடன் ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில், எதிர்த் திசையில் இருந்து வந்த வான் ஒன்று ஓட்டோவுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த மகள் மற்றும் மகன் கேகாலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஓட்டோவின் சாரதி காயங்களுடன் கரவனெல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகக் கேகாலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வானின் சாரதியைக் கைது செய்துள்ள பின்தெனிய பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பல்கலை மாணவன் விபத்தில் உயிரிழப்பு

விபத்தில் சிக்கிச் சிகிச்சை பெற்று வந்த வவுனியாவைச் சேர்ந்த 23 வயதுடைய பல்கலைக்கழக மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த சந்திர போஸ் சசிகாந் (வயது 23) என்ற கொழும்பு பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி நண்பரின் வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றுடன் மோதி இவர் விபத்துக்குள்ளாகியிருந்தார்.

மரண விசாரணைகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமாரால் நேற்று முன்னெடுக்கப்பட்டன.




# வவுனியாவில் கத்திக்குத்து சம்பவத்தில் ஒருவர் காயம்!

**(கி.வசந்தன்)**

வவுனியா, இலுப்பையடிச் சந்தியில் புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வவுனியா பாலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கானவர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# பருத்தித்துறை நகர சபையில் புதுவருட கடமை ஆரம்ப நிகழ்வு





2025 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று பருத்தித்துறை நகர சபையில் செயலாளர் திருமதி தாரணி கஜரூபன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது புதிய ஆண்டை வரவேற்று தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை 8.30 மணிக்கு நகர சபை செயலாளரால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் 'தூய்மையான இலங்கை' திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

மேலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற 'க்ளீன் ஸ்ரீலங்கா" தேசிய வேலைத் திட்ட நிகழ்வில் உத்தியோகத்தர்கள் நேரலை ஊடக இணைந்திருந்தனர்.

நிகழ்வில் நகர சபை செயலர் திருமதி தாரணி கஜரூபன் 2025 ஆம் ஆண்டுக்கான கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து சிறப்புரை ஆற்றியிருந்ததுடன் இந்த வருடம் அனைவரது வாழ்வில் மிகுந்த சந்தோசங்களையும் வளங்களையும் கொண்டு வரவேண்டுமென புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் நகர சபை ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.



# இரண்டு ஆண்டுகளுக்கு முன் உயிரிழந்த நபரின் உடலைத் தோண்டி எடுக்குமாறு நீதிமன்று உத்தரவு

மன்னார் நீதிமன்றத்தில் விபத்து தொடர்பான வழக்கொன்றில் ஆஜராக வேண்டிய 40 வயது நபர் ஒருவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில், யாழ். கல்லூண்டாயில் உள்ள சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்ட அவரது உடலை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக தோண்டி எடுக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் இன்று விசேட உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மன்னார் – இலுப்பையில் உள்ள வீதி கடவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த மேற்படி நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அதன் பின்னர், அவர் நவாலி பகுதியில் வசித்து வந்துள்ளார். அப்போது இவ்விபத்து தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.



இந்நிலையில், அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்தார்.

அவர் மூளைக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார் என்று வைத்தியர் ஒருவர் தெரிவித்த நிலையில், கிராம சேவகரும் அதற்கிணங்க பூர்வாங்க செயற்பாடுகளை மேற்கொண்டார்.

இந்நிலையில், கல்லூண்டாய் சென். பீற்றர் தேவாலய சேமக்காலையில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அவர் சந்தித்த விபத்து மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது விபத்தில் சிக்கிய நபர் அங்கு பிரசன்னமாகவில்லை.

விபத்தில் பாதிக்கப்பட்ட நபர் உயிரிழந்து, அவரது சடலம் யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்ட விடயம் அதன் பின்னரே நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சடலம் புதைக்கப்பட்ட பகுதி மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குள் உள்ளமையால் இது குறித்து மல்லாகம் நீதிமன்றத்துக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், நாளை சடலத்தை தோண்டி எடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்புமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி, நாளை மல்லாகம் நீதிமன்ற நீதிவான், சட்ட வைத்திய அதிகாரி, தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகளின் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்படவுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### சிறையில் மரம்

நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளை அங்கு 100 கைதிகள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 25 வயது முதல் 52 வயதுக்கு இடைப்பட்ட 12 பேர் காயமடைந்தனர்.

அவர்கள் உடனடியாக மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் மிதிகம பகுதியைச் சேர்ந்த 34 வயதான நபர் உயிரிழந்தார்.

காயமடைந்த ஏனைய 11 பேரின் உடல் நிலை பாரதூரமாக இல்லை என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

### யாழ். பஸ்...

இது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலான நிலையில் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கக் கோரி பல்வேறு தரப்பில் இருந்தும் அழுத்தங்கள் வந்த நிலையில் , குறித்த காணொளியை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணையின்போது அடையாளம் காணப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் தலைமறைவாகியுள்ள நிலையில், அந்த நபர்களைக் கைது செய்ய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

### பாலத்தின் அடியில்...

சம்பவ இடத்தில் இருந்து தலைக் கவசம் இரண்டும், பயணப் பை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட சடலங்கள் விபத்தால் உயிரிழந்தவர்களது சடலங்களா அல்லது வேறு காரணங்களால் ஏற்பட்ட உயிரிழப்பா என்பது தொடர்பில் இதுவரை தெரியவரவில்லை.

மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பரந்தன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சடலங்கள் நீதிவானின் உத்தரவுக் கமைய பிரேத பரிசோதனைக்காகக் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



# வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம்





(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்டத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை, கனகராயன்குளம் தெற்கு அபிவிருத்தி சங்கத்தின் காணியை பொலிஸாரின் பாவனையில் இருந்து விடுவித்தல், பொருளாதார மத்திய நிலையத்தைத் திறப்பது உட்பட பல்வேறு மிக முக்கிய மான விடயங்கள் கலந்துரையாடப்பட்டு அதற்குரிய தீர்மானங்களும், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாகவும் ஆரா யப்பட்டன.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பி னர்களான செல்வம் அடைக்கல நாதன், ம.ஜெகதீஸ்வரன், செ.திலக நாதன், ப.சத்தியலிங்கம், து.ரவிகரன், முத்து முகமது மற்றும் மாவட்ட செயலா ளர் சரத் சந்திர, மேலதிக அரச அதிபர் திரேஷ்குமார், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸார், இராணுவ உயர் அதி காரி, கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







# யாழில் சாப்பிட்டுவிட்டு உறங்கிய இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு



யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று தூக்கத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அரியாலை பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் சுவேக்கா (வயது 30) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி பெண் நேற்று காலை 9 மணியளவில் உணவு அருந்திவிட்டு படுத்துறங்கியுள்ளார். பின்னர் அந்தப் பெண்ணின் தாயார் மதிய உணவுக்காக அவரை எழுப்பியவேளை அசைவற்று காணப்பட்டார்.

அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரி வித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

சடலம், உடற்கூற்றுப் பரிசோதனை களுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சிவில் சமூக அமைப்புகளின் பெயரில் நடத்தும் அரசியல்

''சிவில் சமூக அமைப்புகளை மக்கள் நம்பமுடியாத ஒரு சூழ்நிலையை சிவில் அமைப்புகளே இன்று உருவாக்கி விட்டன. அரசியலில் சிவில் அமைப்புகள் தங்களின் வகிபாகம் குறித்து மீள் பரிசீலனை செய்தாலொழிய அவற்றால் இன்னொரு கட்டத்துக்கு நகர முடியாது. சிவில் அமைப்புகள் சில கட்சிகளின் பினாமிகளாகவே உள்ளன. சிவில் அமைப்புகளின் மூலம் கிடைக்கும் பிரபல்யத்தைப் பயன்படுத்தி சிலர் தேர்தலில் குதிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். கட்சி அரசியலை முன்னிறுத்தாத - தமிழ்த்தேசிய அரசியலை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட - ஒரு மக்கள் இயக்கமாக சிவில் சமூகங்கள் மாற்றம் பெற்றாலொழிய தமிழ்த்தேசிய அரசியலை வருங்காலங்களில் அவற்றால் நெறிப்படுத்த முடியாது.''

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்.

முற்றிலும் உண்மையான கூற்று.

சிவில் சமூக அமைப்புக்கள் என்ற பெயரில் சிலர் நடத்திய அரசியலினால் - அரசியல் திருதாளங்களினால் - தமிழர்கள் மத்தியில், குறிப்பாக வடக்குத் தமிழர்கள் மத்தியில், 'சிவில் சமூக அமைப்புக்கள்' என்ற பெயரே அதற்குரிய தனித்துவ இயல்பை - சிறப்பை - உயர்வை - இழந்து நிற்பது கண்கூடு.

யுத்த காலத்தில், விசேடமாக இந்தியப் படைகளின் தலையீட்டுக் காலத்திலும் அதற்கு முன்னரும், சிவில் அமைப்புகள், பிரஜைகள் குழுக்களின் உயர்வான பங்களிப்பு, அந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக இருந்தமை மறக்க - மறுக்க - முடியாத உண்மை.

அரசியல் சார்பற்ற - மக்கள் நலன் நோக்கம் மட்டும் கொண்ட - சிவில் அமைப்புகளை அரசும் ஆயுதப் படைகளும் ஆயுதம் தாங்கிய போராளிகளும் மதிக்கக் கூடிய நிலைமை நிலவியது.


சிவில் அமைப்புக்களின் பெயரில் எவரும் அச்சமயத்தில் தங்களின் சொந்த அரசியலை - நோக்கங்களை - முன்னெடுத்துச் செல்லவில்லை. மாறாக மக்களின் ஒன்றுபட்ட கருத்தியலை வெளிப்படுத்தும் கட்டமைப்புகளாக அவை அச்சமயத்தில் மிளிர்ந்தன.

சிவில் செயற்பாட்டாளர்கள் நேரடி அரசியலுக்கு வந்தாலேயே அவர்கள் அதற்குப் பின்னர் தங்களை 'சிவில் செயற்பாட்டாளர்கள்' என்று கூறமுடியாது. அவர்கள் அதற்கு அப்புறம் அரசியல்வாதிகள். அது போலவே நேரடி அரசியலில் பங்காளிகளாகும் சிவில் அமைப்புகளும் அதற்கப்புறம் அரசியல் கட்டமைப்புகள்தாம்.

இப்போது சில அரசியல் இலக்கு கொண்டவர்கள் தங்களின் தனிப்பட்ட அரசியலுக்கும், தங்கள் அரசியல் இலக்குகளுக்கும் 'சிவில் சமூக அமைப்பு' என்ற பெயரைப் பயன்படுத்துவது பெரும் துரதிஷ்டமாகும்.

அதுவும் தமிழ் தேசிய அரசியலை செப்பனிடுகின்றோம் என்ற பெயரில் அவர்கள் செய்த - செய்து கொண்டிருக்கின்ற - நேரடி அரசியல் நகர்வுகள், காய் நகர்த்தல்கள் சிவில் சமூகக் கட்டமைப்புகளின் தனிச்சிறப்பை - தனித்துவத்தை - நாசமாக்கி விட்டன.

இன்று சிவில் சமூக அமைப்பின் நாதியற்ற நிலைமையை வெளிப்படையாகவே சுட்டிக்காட்டுகின்ற சூழலியலாளர் - தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தலைவர் - அரசியல்வாதி - ஐங்கரநேசன் உட்பட அரசியல்வாதிகள் பலரும் இத்தகைய சிவில் சமூக அமைப்புக்களின் பேரில் சிலர் அரசியல் செய்ய முற்பட்டபோது அதை அச்சமயத்தில் வெளிப்படையாகக் கூறித் திருத்தாமல், அதனைத் தங்கள் அரசியல் நகர்வுகளுக்குப் பயன்படுத்திய பின்னர், அதன் பெறுபேறு சாதகமாக வரவில்லை என்ற சூழலில், சிவில் சமூக அமைப்புக்களின் பேரில் அரசியல் செய்பவர்களை இப்போது கடிந்து கொள்வதில் அர்த்தமில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# மகிழூரில் சிறுவர் நூலகம் திறப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மகிழூர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் அலுவலக வளாகத்தில் கடந்த சிறுவர் நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினத்தின் ஆலோசனைகக இணங்கவும், உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரனின், வழிகாட்டுதலுக்கு அமைவாகவும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான ம. புவிதரன், செ.சக்திநாயகம் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் சிறுவர் நூலகம் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரனால் திறந்து வைக்கப்பட்டது.



இந்தச் சிறுவர் நூலகததைச் சக்தி சிறுவர் கழகத்தினர் பராமரிப்பு செய்வதற்கு ஒப்படைக்கப்பட்டது.

இன்றைய காலத்தில் சிறுவர்கள் தங்களது ஓய்வு நேரங்களில் முறையான பொழுது போக்கு அம்சங்கள் இல்லாமையால் வழி தவறிப் போகக் கூடிய வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது.

இதனால் தமது ஓய்வு நேரங்களை வீதியோரங்களில் கழிக்கும் நிலமையும், கையடக்க தொலைபேசி பாவனையில் மூழ்கி இருக்கும் நிலைமையும் அவதானிக்கப்பட்டது. இதனை அடுத்து இந்த நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் இந்த நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த வருடம் மகிழூர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு நான்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மூலம் சிறுவர் சிநேகபூர்வ முன்மாதிரி கிராமமாக தெரிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.







# புங்குடுதீவு விளையாட்டு கழகங்களுக்கு உபகரணம்

(த.சுபேசன்)

யாழ்ப்பாணம், புங்குடுதீவு பிரதேசத்தில் விளையாட்டு துறையில் ஈடுபட்டு வரும் அனைத்து விளையாட்டு கழகங்களுக்கும் ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் பிரமுகர் கருணாகரன் குணாளனின் ஏற்பாட்டில் அண்மையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது பத்து லட்சம் ரூபா பெறுமதியான உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட, மென்பந்து துடுப்பாட்ட உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கருணாகரன் நாவலன், சமூக செயற்பாட்டாளர்களான பி.சதீஷ், கு.பேபிஷன், ஜெ.லக்சிகா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை சுகாதார பணிமனையின் ஒன்று கூடலும் சேவை நலன் பாராட்டும்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த ஒன்று கூடலும் சேவை நலன் பாராட்டு நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் கல்முனை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நீண்ட காலமாகப் பணியாற்றி வருடாந்த இடமாற்றம் பெற்றுச் சென்ற பலர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.







# ‘தூய்மையான இலங்கை’ வேலைத் திட்டம்!

## வவுனியா மாவட்ட செயலகத்தில்...



(கி.வசந்தன்)

தேசிய ரீதியில் இவ்வாண்டு முதலாம் திகதி முதல் ‘தூய்மையான இலங்கை’ வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் ‘தூய்மையான இலங்கை’ வேலைத் திட்டத்துக்கான உறுதி எடுத்துக் கொண்டனர்.

நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னதாக மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தேசிய கொடியை ஏற்றி வைத்தார். பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதத்தலைவர்களும் ஆசியுரைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில், மேலதிக அரச அதிபர், உதவி மாவட்ட செயலாளர், திணைக்கள தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## யாழ். மாவட்ட செயலகத்தில்...

2025 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பித்தல் நிகழ்வும் ‘தூய்மையான இலங்கை’ பிரஜைகள் சத்தியப் பிரமாணம் எடுத்தல் நிகழ்வும் யாழில் இடம்பெற்றன.

யாழ். மாவட்ட செயலகத்தின அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை மாவட்ட செயலகம் முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரச அதிபர் தேசியக் கொடி ஏற்றி வைத்தார். தொடர்ந்து, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 02 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து உத்தியோகத்தர்களால் ‘தூய்மையான இலங்கை’ பிரஜைகள் சத்தியப் பிரமாண உறுதிமொழி எடுக்கப்பட்டது.





# காரைதீவு பொலிஸார் உறுதிமொழி...





(வி.ரி.சகாதேவராஜா)

'தூய்மையான இலங்கை' புத்தாண்டு உறுதிமொழி காரைதீவு பொலீஸ் நிலையத்தில் நேற்று (01) புதன்கிழமை காலை நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எஸ். ஜெகத் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் ...





(எம் எப். நவாஸ்)

2025 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப நிகழ்வானது அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பிரீஎம். இர்பான் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து உயிரிழந்தவர்களுக்காக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மத தலைவர்களால் நற்சிந்தனை வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் தீகவாபி சைத்திய பரிவார விகாராதிபதியும் கலந்து கொண்டார்.

# கல்முனை ஆதார வைத்தியசாலையில்...





(வி.ரி. சகாதேவராஜா)

இன்று நடப்படும் சந்தன மரம் போன்று நாமும் வாழ்ந்து மற்றவர்கள் மனதிலும் மணம் வீசும் செயற்பாடுகளை முன்னேடுப்போம்.

இவ்வாறு கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

கல்முனை ஆதார வைத்திய சாலையில் 'தூய்மையான இலங்கை' நிகழ்ச்சி திட்டத்துக்கு அமைவாக 2025 ஆம் ஆண்டுக்கான கடமைகள் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது தெரிவித்தார்.

இந்த நிகழ்வானது வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் தலைமையின் கீழ் அரச நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக நேற்று (01) காலை நடைபெற்றது.

தேசிய கொடியை ஏற்றி வைத்திய சாலை பணிப்பாளர் வழமையான செயற்பாடுகளான மரம் நடுதல், புறா விடுதல், என்பனவற்றுடன் பால் சோறு வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.





# முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்...

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

'தூய்மையான இலங்கை' தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக 2025 ஆம் வருடத்தில் அரச கடமைகளை ஆரம்பம் செய்யும் அரச சேவை சத்தியபிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று (01) முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள வளாகத்தில் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ். எம். நவாஸ் தலைமையில் நடைபெற்றது.

சமூக நல்லிணக்கம், ஒற்றுமை, தேசிய நலன், அபிவிருத்தி, முன் மாதிரியாகச் செயற்படல் மற்றும் கூட்டுப் பொறுப்பு என்பனவற்றின் ஊடாக மாற்றத்தை ஏற்படுத்தல் என்ற நோக்கத்தை மையப்படுத்தி இந்த கடமை ஆரம்ப நாள் நிகழ்வு அமையப் பெற்றது.

# அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில்...







**(எம். எப். றிபாஸ்)ய**

'தூய்மையான இலங்கை' தேசிய நிகழ்ச்சி திட்டம் 2025 கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.சீ.றிஸ்வான் தலைமையில் இடம்பெற்றது.

சத்திய பிரமாண நிகழ்வில் மேலதிக மாவட்ட நீதிபதி றெசீபா ரஜீவன் உட்பட பதிவாளர்கள், உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில்...






**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் 2025 ஆம் ஆண்டில் முதல் நாள் கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று (01) பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளரால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. தாய் நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்கான மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து 'தூய்மையான இலங்கை' உறுதிமொழி வாசிக்கப்பட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் உறுதி உரைத்து ஏற்றுக் கொண்டனர்.



# களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில்...





(வி.ரி. சகாதேவராஜா)

'தூய்மையான இலங்கை' தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக 2025 ஆம் ஆண்டின் கடமை செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று (01) களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக வளா கத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, அலுவலக உத்தியோகத் தர்களால் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. மும்மத அனுஷ்டானங்கள் இடம்பெற்று நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# நிதி அமைச்சில்...





புத்தாண்டு பணிகளை ஆரம்பித்து வைத்து'தூய்மையான இலங்கை' உறுதிமொழி வழங்கும் நிகழ்வு நேற்று (01) நிதியமைச்சில் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தலைமையில் இடம்பெற்றது. கருவூல துணைச் செயலாளர்கள், துறைகளின் இயக்குநர் ஜெனரல்கள் மற்றும் பிற அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் நடைபெற்ற தேநீர் விருந்தில் பிரதி அமைச்சர்களான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சம்மாந்துறை பிரதேச சபையில்...

(பாறுக் ஷிஹான்)

'தூய்மையான இலங்கை' தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து, சம்மாந்துறை பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் புது வருடத்தில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் நேற்று (01) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச சபை செயலாளரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்ட, பின்னர் நாட்டின் நிரந்தர சமாதானத்துக்காகவும் நாட்டில் உயிரிழந்தவர்களுக்காகவும் இரு நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச சபையில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.





# சம்மாந்துறை பிரதேச செயலகத்தில்...





(பாறுக் ஷிஹான்)

'தூய்மையான இலங்கை' தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக 2025 ஆம் வருடத்தில் அரச கடமைகளை ஆரம்பித்தல் அரச சேவை சத்தியபிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று (01) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம். அஸ்லம், கணக்காளர் எஸ்.எல். சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜெமீல், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹுஸைன், மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே. றினோஸா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எப். சாஹீன, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# கிழக்கு மாகாண சபையில்...






(அபு அலா, மட்டு.துஷாரா)

புதுவருடப் பிறப்பு மற்றும் 'தூய்மையான இலங்கை' கடமை ஆரம்ப நிகழ்வு கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட்.ஏ.எம்.பைஷல் தலைமையில் மாகாண வளாகத்தில் (01) இடம்பெற்றது.

இந்த 'தூய்மையான இலங்கை' முதல் நாள் நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சு, சுகாதார அமைச்சு, சுதேச மருத்துவ திணைக்களம், சட்டப்பிரிவு, சமூக சேவைகள் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம், சுற்றுலாத்துறை பணியகம், தேசிய கணக்காய்வுத் திணைக்களம் (உள்ளகப் பிரிவு) வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரிவு போன்ற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் 'தூய்மையான இலங்கை' என்ற திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

2025 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப நிகழ்வை கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட்.ஏ.எம். பைஷல் தேசியக் கொடியையும், சுகாதார அமைச்சின் செயலாளர் எல்.பி.மதநாயக்க மாகாணக் கொடியையும் ஏற்றி வைத்தனர். பின்னர் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.





# சாய்ந்தமருது சுகாதார அதிகாரி பிரிவில்...





(நூருல் ஹுதா உமர் )

'தூய்மையான இலங்கை' திட்டத்தின் கீழ் முதல் நாள் கடமை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று (01) சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கலந்து கொண்டனர். சுகாதார வைத்திய அதிகாரியால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து சத்திய பிரமாண உறுதிமொழி எடுக்கப்பட்டது.

# வட மாகாணத்தில் 3,499 வர்த்தகர்கள் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறினர்!

## 2 கோடியே 58 லட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபா தண்டம்

(கி.வசந்தன்)

2024 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 3 ஆயிரத்து 499 வர்தகர்களுக்கு எதிராக 2 கோடியே 58 லட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் 3 ஆயிரத்து 445 சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. 3 ஆயிரத்து 361 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 744 சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. 903 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 946 வர்த்தகர்களுக்கு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 57 லட்சத்து 48 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# காரைதீவு இளம் பெண் சட்டத்தரணி சட்டத் துறையில் முதுமாணிப் பட்டம்!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவைச் சேர்ந்த இளம் பெண் சட்டத்தரணியான செல்வி டிறுக்ஷா தம்பிராஜா சட்ட முதுமாணிப் பட்டம் பெற்றார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் பயின்ற அவருக்கான சட்ட முதுமாணி பட்டமளிப்பு விழா அண்மையில் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர் தம்பிராஜா மற்றும் ஓய்வு நிலை அதிபர் கலைவாணி தம்பதியினரின் புதல்வி டிறுக்ஷா இந்தப் பிராந்தியத்தின் இளம் பெண் சட்டத்தரணிகளுள் முதலாவது சட்ட முதுமாணியாவார்.



# நீதிமன்றக் களஞ்சிய சாலையிலிருந்து கைபேசி திருடிய பெண்ணுக்கு மறியல்!

## காதலனுக்கு பரிசளித்துள்ளாராம்!!

(மஸ்கெலியா )

நுவரெலியா நீதிவான் நீதிமன்றின் வழக்குப் பொருள்கள் களஞ்சியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க கைத் தொலை பேசியைக் களவாடித் தனது காதலனுக்கு பரிசாக வழங்கிய பெண் ஒருவருவரை எதிர் வரும் 09 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பெறுமதியான தொலைபேசி காணாமல் போனமை தொடர்பில் நுவரெலியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன் பிரகாரம், நுவரெலியா நீதிவான் நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளது.

நீதிமன்ற வழக்குப் பிரிவில் பணிபுரியும் பெண் ஒருவர் இந்தப் பெறுமதியான கையடக்கத் தொலைபேசியைத் திருடி தனது காதலனுக்கு பரிசாக வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் கடந்த (22) ஆம் திகதி வழக்கு அறையில் பெறுமதியான தொலைபேசி காணாமல் போனமை தொடர்பில் நுவரெலியா பொலிஸில் முறைப்பாடு கிடைக்கப் பெற்றது.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் நுவரெலியா தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சியின் பணிப்புரையின் பிரகாரம் உப பொலிஸ் பரிசோதகர் பிரியதர்சன மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் 75607 ரசிக ஆகியோர் தொலைபேசி தரவுகளை சரிபார்த்து காணாமல் போன தொலைபேசியை பயன்படுத்திய நபரை கண்டுபிடித்தனர்.

நஇந்த நிலையில் அங்கு பணிபுரிந்த பெண் உத்தியோகத்தர் ஒருவரே குறித்த தொலைபேசியை காதலனுக்குப் பரிசாக வழங்கியுள்ளார் என்று விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

தொலைபேசியைக் களவாடிய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து கடந்த 30 ஆம் திகதி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, எதிர்வரும் 9 ஆம் திகதிவரை அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நுவரெலியா நீதிவான் மிஸ் பிரபுத்திகா லங்காங்கனி உத்தரவிட்டுள்ளார்.



# கஞ்சா செடிகளை வளர்த்து வந்தாராம்; அதிகாரி அக்கரப்பத்தனையில் கைது!

(ஆ.ரமேஸ்)

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிலாஸ்கோ திட்ட உதவி அதிகாரியை அக்கரைப்பற்று பொலிஸார் நேற்று (01) மாலை கைது செய்துள்ளனர்.

அக்கரைப்பற்று பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கிலாஸ் தோட்டத்தில் பணியாற்றும் இவர், தனக்கு வழங்கப்பட்டுள்ள தங்குமிட விடுதியின் விவசாய காணியில் கஞ்சா செடிகளை வளர்த்து வந்துள்ளார். இந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக நேற்று மாலை குறித்த விடுதிக்கு விரைந்த அக்கரப்பத்தனை பொலிஸார் விடுதியின் வளாகத்தைச் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது வளாகத்தின் விவசாய காணியில் ஒவ்வொன்றும் ஒரு அடி நீலம் கொண்ட 11 கஞ்சா செடிகளை தோட்ட உதவி அதிகாரி வளர்த்து வந்துள்ளமை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து விசாரணைகளை செய்த அக்கரப்பத்தனை பொலிஸார் தோட்ட உதவி அதிகாரியைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள தோட்ட உதவி அதிகாரி (வயது -43) மெனிக்கின்ன பகுதியை சேர்ந்தவர் எனவும் அக்கரப்பத்தனை கிலாஸ்கோ திட்டத்துக்குப் பணியாற்ற வருகை தந்து ஒரு மாத காலம் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவரை நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




# கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளராக அஸ்மி நேற்றுக் கடமைகளை ஏற்றார்!

(அபு அலா )

இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான ஏ.எல்.எம்.அஸ்மி கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகக் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர வால் நியமிக்கப்பட்டுள்ளார் இந்த நிலையில் அவர் நேற்று (01) கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அஸ்மியின் சேவைத்தரம், தகுதி மற்றும் உள்ளூராட்சி நிர்வாகத்தில் ஒரு தசாப்தகால அனுபவம் என்பவற்றின் அடிப்படையிலும் உள்ளூராட்சி நிர்வாகத்தின் வளர்ச்சிக்கு வழங்கிவந்த தலைமைத்துவ வழிகாட்டுதல்கள், நிர்வாக மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டு திறமைகள் என்பவற்றை கருத்தில் கொண்டே இந்த நியமனம் வழங்கப்பட்டது.

இவர் கிழக்கு மாகாணத்தில் ஒரு சிறந்த உள்ளூராட்சி மன்றமாக அக்கரைப்பற்று மற்றும் கல்முனை மாநகர சபைகளை மிளிரச்செய்வதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஒருவராவார்.

பொத்துவில், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர், அக்கரைப்பற்று மாநகராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர், பதிவாளர், கல்முனை மாநகராட்சி ஆணையாளர், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) போன்றவற்றில் அஸ்மி கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருவெம்பாவை ஊர்வலம் சனிக்கிழமை ஆரம்பமாகிறது

(வி.ரி. சகாதேவராஜா)

வருடாவருடம் இடம்பெற்று வரும் இந்துக்களின் திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவை ஊர்வலமானது இந்த முறையும் சிறப்பான முறையில் நாளை மறுதினம் (04) சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகின்றது.

சிவனை நினைந்து வழிபடும் இவ்விரதம் நிகழ்வு சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவெம்பாவை ஊர்வலம், ஆலய பூஜைகள் இடம்பெறவுள்ளன.

காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் வருடா வருடம் நடத்திவரும் திருப்பள்ளி எழுச்சி ஊர்வலமானது நாளை மறுதினம் சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும். 13 ஆம் திகதி திங்கட்கிழமை திருவாதிரையில் ஆருத்ரா தரிசனத்துடன் இவ்விரதம் நிறைவடையும்.



# திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை ஹட்டன் நகரில் 130 பேர் கைது!

(மஸ்கெலியா )

ஹட்டன் பொலிஸ் பிரிவில் உள்ள ஒன்பது பொலிஸ் நிலையங்களாலும் நேற்று முன்தினம் (31) இரவு மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில் 130 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிகள், சட்ட விரோதமாக வாகனங்கள் செலுத்தியவர்கள் என 130 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது ஹட்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது என ஹட்டன் வலய பொலிஸ் அதிகாரி பிரதீப் விஜயசேகர தெரிவித்தார்.

இந்த சுற்றி வளைப்பின் போது மது போதையில் வாகனம் செலுத்திய நால்வர், வாகனங்கள் தவறான முறையில் செலுத்திய 109 பேர், பலதரப்பட்ட குற்ற செயல்களில் ஈடுபட்டு வந்த 17 பேர் உட்பட 130 பேர் சட்டத்தின் முன் நிறுத்தப்படவுள்ளனர்.

இவ்வாறான சுற்றிவளைப்புகள் தொடர்ந்து நடைபெறும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# எனக்கும் அன்புமணிக்கும் இடையேயான கருத்து மோதல் சரியாகிவிட்டது: ராமதாஸ்

"பொதுக்குழுக் கூட்டத்தில் பா.ம.க. தலைவர் அன்புமணியும், நானும் பேசியது உட்கட்சி விவகாரம். அது சரியாகிவிட்டது. பா.ம.க. இளைஞர் சங்கத் தலைவராக முகுந்தன் பரசுராமனை அறிவித்துவிட்டோம். அவருக்கு நியமனக் கடிதமும் கொடுத்துவிட்டோம்."

- இவ்வாறு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

"பொதுக்குழுக் கூட்டத்தில் பேசப்படும் விஷயங்கள், உட்கட்சி விவகாரம். பொதுக்குழுக் கூட்டத்தில் ஊடகவியலாளர்களை எந்தக் கட்சியினரும் அனுமதிக்கமாட்டார்கள். அந்த கூட்டத்தில் பாமக தலைவர் அன்புமணியும், நானும் பேசியது உட்கட்சி விவகாரம். அது சரியாகிவிட்டது. அதன்பிறகு அன்புமணி இங்கு வந்தார். அவருடன் பேசினேன்,



சரியாகிவிட்டது.

பொதுக்குழுக் கூட்டத்தில், பா.ம.க. இளைஞர் சங்கத் தலைவராக முகுந்தன்பரசுராமனை அறிவித்துவிட்டோம். அவருக்கு நியமனக் கடிதமும் கொடுத்துவிட்டோம். அவர் அந்தப் பதவியில் நீடிக்கிறாரா என்ற பேச்சுக்கே இடமில்லை. பொதுக்குழுவில் அறிவித்தபடி அடுத்தநாளே அவருக்கு நியமனம் கடிதம் கொடுத்துவிட்டேன்.

பொதுக்குழுவில் நடந்த விவகாரம் பா.ம.கவின் வளர்ச்சியை பாதிக்காது. பா.ம.க, ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கட்சி சார்பில் நடக்கும், பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டங்களின் போது, என்னை விமர்சியுங்கள், என்னுடைய தவறுகளை விமர்சியுங்கள் என்றுதான் கூறுவேன். நேரடியாக என்னை விமர்சிக்க தயங்குபவர்கள், தொலைபேசி வழியாக என்னிடம் பேசுங்கள் அல்லது கடிதம் எழுதுமாறு கேட்டுக் கொள்வேன். இப்போதும் அதைத்தான் கூட்டங்களில் சொல்கிறேன்.

காரணம் நான் தவறு செய்வதை சுட்டிக்காட்டினால்தான் நான் திருத்திக் கொள்வேன். நான் சொல்வதெல்லாம் சரிதான் என்று கேட்டுச் சென்றால், என் தவறும் தெரியாது நான் திருத்திக்கொள்ளவும் முடியாது.

பத்திரிகையாளர் சந்திப்புகளில் கூட எந்த கேள்வி கேட்டாலும் எனக்கு கோபம் வருவதில்லை. எதற்காக கோபம் வரவேண்டும். ஒரு கட்சியின் தலைவர் உள்ளிட்ட எந்த பதவியில் இருப்பவர்களுக்கும் பத்திரிகையாளர்கள் எந்த கேள்வி கேட்டாலும் கோபம் வரக்கூடாது. மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்து நான் விமர்சிப்பதை, தைலாபுரத்தில் எனக்கு தைலம் வருகிறது என்று நளினமாக, நாகரிகமாக கூறுவார்."- என்றார்.



# இராமநாதபுரம் மருத்துவனையில் தீ விபத்து: நோயாளிகள் வேறு தளத்துக்கு மாற்றம்

இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புதிய கட்டடத்தில் நள்ளிரவில் ஏற்பட்ட தீ விபத்தால், கரும்புகை ஏற்பட்டு நோயாளிகள் உடனடியாக வேறு தளத்துக்கு மாற்றப்பட்டனர். துரித நடவடிக்கையால் பெரும் தீ விபத்து தவிர்க்கப்பட்டது.

இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புதிய கட்டடம் ஐந்து தளங்களில் செயல்பட்டு வருகிறது. இங்கு 500 இற்கும் மேற்பட்டோர் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். நேற்று புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் மருத்துவமனையின் இரண்டாவது தளத்தில் உள்ள இன்வெர்டர் அறையில் திடீரென தீப்பற்றி புகைமூட்டம் ஏற்பட்டது. இதனால் இரண்டாவது தளம் முழுவதும் கரும்புகை சூழ்ந்தது.

இதில் ஒரு சிலருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. புகை மூட்டம் ஏற்பட்டதால் உள் நோயாளிகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள், அவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். அதிர்ச்சி அடைந்த மருத்துவமனை ஊழியர்கள் உடனடியாக மின்சாரத்தை துண்டித்துள்ளனர். இதனால் புதிய மருத்துவமனை கட்டடம் இருளில் மூழ்கியது.

உடனடியாக மருத்துவமனை பணியாளர்கள், பொதுமக்கள், பொலிஸார் , தீயணைப்புத் துறையினர் டார்ச் லைட் மற்றும் அவசர விளக்குகளை பயன்படுத்தி, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தளத்தில் இருந்த நோயாளிகளை அவசரமாக முதல் தளத்துக்கு மாற்றினர். இதில் செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டிருந்த ஒரு சில நோயாளிகள் முதல் தளத்தில் உள்ள அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

ஏனைய நோயாளிகள் பழைய மருத்துவமனை கட்டடத்துக்கு மாற்றப்பட்டனர். இவ்விபத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும், இன்வெர்ட்டர் அறையில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக மருத்துவமனை நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் தீயணைப்புத்துறையினர் தீ விபத்து ஏற்பட்ட இன்வெர்ட்டர் அறையில் தீயை அணைத்து, மேலும் பரவாமல் தடுத்தனர். மேலும் பொலிஸாரும், தீயணைப்புத் துறையினரும் தீவிபத்துக்கான காரணம் குறித்து விசாரணை செய்து வருகின்றனர்.






# புத்தாண்டில் மொண்டெனேகுரோவை உலுக்கிய துப்பாக்கி சூடு; 10 பேர் பலி

தென்கிழக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள மொண்டெனேகுரோவின் மேற்கு நகரமொன்றில் நேற்று புதன்கிழமை மதுபானசாலையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இரு குழந்தைகள் உட்பட குறைந்தது 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் மேலும் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் 45 வயதான அகோ மார்டினோவிக் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சந்தேக நபர் துப்பாக்கிச் சூட்டுக்கு பின்னர், தன்னைத் தானே சுட்டுக் கொண்டுள்ளார் எனவும் பின்னர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்து விட்டார் என்றும் மொண்டெனேகுரோவின் உள்துறை அமைச்சர் டானிலோ சரனோவிக் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கி ஏந்திய நபர் செட்டின்ஜே நகரில் அமைந்துள்ள மதுபானசாலையின் உரிமையாளரை முதலில் சுட்டுக் கொன்றார், பின்னர் அவரது குழந்தைகள் மற்றும் அவரது சொந்த குடும்ப உறுப்பினர்கள் மீதும் துப்பாக்கி சூடு நடத்தியதாக உள்துறை அமைச்சர் டானிலோ சரனோவிக் கூறினார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயம் அடைந்த 4 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், இந்த துப்பாக்கிச் சூடு, திட்டமிட்ட குற்றத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

சிறிய பால்கன் நாட்டில் வெகுஜன துப்பாக்கிச் சூடுகள் ஒப்பீட்டளவில் அரிதானவை.

இறுதியாக கடந்த 2022 ஆம் ஆண்டில், செட்டின்ஜேயில், இரண்டு குழந்தைகள் மற்றும் ஒரு துப்பாக்கிதாரி உட்பட 11 பேர் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# அமெரிக்காவில் மக்கள் மீது வாகனத்தை செலுத்தி விபத்து ஏற்படுத்தியவர் அடையாளம் காணப்பட்டார்

அமெரிக்காவின் டெக்சாஸில் மக்கள் கூட்டத்தின் மீது வாகனத்தை செலுத்தி விபத்தி ஏற்படுத்திய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

42 வயதான அமெரிக்க பிரஜை ஒருவரே இவ்வாறு மக்கள் கூட்டத்தின் மீது வாகனத்தை செலுத்தியதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 35 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மக்கள் கூட்டத்தின் மீது மோதிய வாகனத்தில் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய கொடி ஒன்று காணப்பட்டதாகவும், அதனடிப்படையில் பயங்கரவாத சட்டத்தின் கீழ் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், மேற்படி வாகனத்தை செலுத்திய நபர் அதற்கு முழுமையான பொறுப்பாளி இல்லை என விசாரணை அதிகாரிகள் கூறுகின்றனர்.

அத்துடன் விபத்துக்குள்ளான வாகனத்தில் இருந்து வெடி பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், சம்பவம் குறித்த விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, தாக்குதலில் ஈடுபட்ட நபர் அதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் சமூக வலைதளங்களில் ஒரு காணொலியை பதிவு செய்துள்ளார். அதில் அந்த நபர் தான் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பால் ஈர்க்கப்பட்டதாகவும், அதனால் கொலையில் விருப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் சேர விரும்புவதாகவும் கூறி காணொலிகளை பதிவு செய்து வைத்துள்ளார்.

பக்கங்கள் 02

கனடா முரசு

வியாழக்கிழமை 02/01/2025

**கனடாவின் ரொறன்ரோ பகுதியில் கப்பம் கோரல் சம்பவங்கள் அதிகரிப்பு**

கனடாவில் கப்பம் கோரல் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ரொறன்ரோ பகுதியில் இவ்வாறான கப்பம் கோரல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02▶




# கனடாவில் தேங்கியுள்ள 215,000 கடவுச்சீட்டுகள்

**கனடாவில் ஒரு மாத காலம் நீண்ட அஞ்சல்த்துறை வேலை நிறுத்தம் காரணமாக முடங்கிய கடவுச்சீட்டு விநியோகம் தற்போது மீண்டும் துவங்கியுள்ளது. இதனால் தற்போது பல ஆயிரம் கடவுச்சீட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டு வந்தாலும், இன்னும் தாமதமாகும் வாய்ப்பிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.**

வெளியான தரவுகளின் அடிப்படையில் வேலை நிறுத்தம் காரணமாக நவம்பர் 8 ஆம் திகதி முதல் குறைந்தபட்சம் 215,000 புதிய கடவுச்சீட்டுகள் மற்றும் கடவுச்சீட்டு தொடர்புடைய அஞ்சல்கள் தேங்கியுள்ளன.

டிசம்பர் 1ஆம் திகதி வெளியான தரவுகளின் அடிப்படையில் 185,000 புதிய கடவுச்சீட்டுகள் தற்காலிகமாக விநியோகம் செய்யாமல் முடக்கப்பட்டது. ஆனால் டிசம்பர் 17 ஆம் திகதி வேலை நிறுத்தம் முடிவுக்கு வரும்போது கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை 215,000 என உயர்ந்துள்ளது.

தற்போது கடவுச்சீட்டு விநியோகத்திற்கான சேவையை மீண்டும் தொடங்குவதற்கான திட்டத்தில் கனடா அஞ்சலுடன் சேவை கனடாவும் பணியாற்ற உள்ளது. மட்டுமின்றி, நெருக்கடி நிலையை சமாளிக்க, அடுத்த ஆண்டு தொடக்கத்தி 02▶

# வங்கியில் கொள்ளையிட முயற்சித்த நபரின் சைக்கிள் களவாடப்பட்டது

கனடாவில் வங்கிக் கொள்ளையில் ஈடுபட முயற்சித்த நபரின் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது. கனடாவின் ஹமில்டன் பகுதியில் இந்த வங்கிக் கொள்ளை முயற்சி இடம்பெற்றுள்ளது.

மொன்றியல் வங்கியின் கிளையொன்றில் புகுந்த நபர் ஒருவர் வங்கிப் பணியாளரை அச்சுறுத்தி பணம் கொள்ளையிட முயற்சித்துள்ளார்.

துப்பாக்கி இருப்பதாகக் கூறி வங்கிப் பணியாளரை அச்சுறுத்தியுள்ளார்.

இதன் போது சக வங்கிப் பணியாளர்கள் அந்த கொள்ளையரை தடுக்க முயற்சித்துள்ளனர்.



இந்த சம்பவத்தின் போது கொள்ளையரினால் பணம் கொள்ளையிட முடியவில்லை எனவும் வெறும் கையுடன் வங்கியை விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சைக்கிள் ஒன்றில் வங்கியில் கொள்ளையிட சென்றிருந்த அந்த நபர், வெளியே நிறுத்தியிருந்த சைக்கிளை தேடியுள்ளார். எனினும், அந்த சைக்கிளை வேறும் ஒருவர் களவாடிச் சென்றுள்ளார்.

இதனால். அந்த கொள்ளையர் கால் நடையாகவே சம்பவ இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

வங்கிக் கொள்ளையில் ஈடுபட முயற்சித்த நபர் மற்றும் சைக்கிளை கொள்ளையிட்ட நபர் ஆகியோரை பொலிஸார் தேடி வருகின்றனர். 02▶





# கனடாவின் ரொறன்ரோவில் ஏ.ரீ.எம். இயந்திரம் கொள்ளை

ரொறன்ரோவில் ஏ.ரீ.எம் இயந்திரம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் நோர்த் யோர்க் பிராந்தியத்தில் வங்கியொன்றின் ஏ.ரீ.எம். இயந்திரம் தகர்க்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளது.

பெக்கோ இயந்திரம் ஒன்றின் மூலம் கட்டடத்திற்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டு இந்த கொள்ளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிகாலை வேளையில் கொள்ளைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நோர்த் யோர்க்கின் லோரன்ஸ் மற்றும் பதுரஸ்ட் வீதிகளில் அமைந்துள்ள TD வங்கியில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எவ்வளவு தொகை பணம் களவாடப்பட்டது என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. எவ்வாறெனினும் வங்கிக் கட்டடத்திற்கு பெரும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக ரொறன்ரோ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





# கனடா ஒஷாவாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கனடாவின் ஒஷாவாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

வென்வோர்த் மற்றும் சீடர் வீதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள குடியிருப்புத் தொகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்த போது ஆண் ஒருவர் படுகாயமடைந்திருந்தார் எனவும் அவர் பின்னர் உயிரிழந்து விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் ஆள் அடையாள விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும், அஞ்சல் விநியோகம் நீட்டிக்கப்படலாம் என்றே கூறியுள்ளனர்.

மேலும், டிசம்பர் 16, 2024 முதல் எந்தப் புதிய கடவுச்சீட்டு விண்ணப்பங்களும் செயலாக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன என்றால் வழக்கம் போல் அவர்கள் கோரும் அஞ்சல் மூலமாக வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும்.

எஞ்சிய கடவுச்சீட்டுகள் ஜனவரி 2025 இல் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றே கனடா அஞ்சல் தெரிவித்துள்ளது.

புதிய கடவுச்சீட்டுக்காக இன்னும் காத்திருக்கும் கனேடியர்கள் மற்றும் அவசரமாகப் பயணம் செய்ய வேண்டியவர்கள் கடவுச்சீட்டுத் திட்டத்தைத் தொடர்புகொள்ளவும் அல்லது சேவை கனடா மையத்தைப் பார்வையிடவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கடந்த நவம்பர் 15 இல் தொடங்கி, 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஊதிய உயர்வு, சிறந்த ஓய்வூதியம் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார நலன்களை கோரி கனேடிய தபால் ஊழியர் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலைபேசிகளுக்கு வன்முறையான படங்களை அனுப்பி அதன் மூலம் அச்சுறுத்தல் விடுத்து பணம் கோரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவிலிருந்து தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் குறுஞ்செய்திகள் ஊடாக கப்பம் கோரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவின் அணுக்கக் குறி யெண் 470 மற்றும் 404 ஆகியனவற்றினை அடிப்படையாகக் கொண்ட எண்களிலிருந்து அழைப்பு எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கோரப்படும் பணம் வழங்கப்படாவிட்டால் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படும் என எச்சரிக்கை விடுத்து தகவல்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான கப்பம் கோரல் அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றால் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.